பட்டம் ஆட்சியில் 11 தமிழர்கள் பலி?

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆடி 28உ வியாழன் (12—8—54) வெளியூர்: ஆடி 29உ வெள்ளி (13—8—54)	மலர்: 2 இதழ்: 51

—(:)—

மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம்!

அறப்போரில் தமிழ் மக்கள் இரத்தம் சிந்தினர்!

மாணவர்கள் மீது போலீஸ் தடியடி!

90,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

கடையடைப்பு, ஊர்வலம் நடைபெற்றன

திருவாங்கூர் — தமிழர் அறப்போர் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது

தாயகத்துடன் சேர வேண்டுமென்ற உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்கள்மீது, திரு—கொச்சி போலீசார் மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, 11 தமிழர்களின் உயிரைக் குடித்தனர் என்று கூறப்படுகிறது.

'தமிழ் வாழ்க', 'தாயகத்துடன் சேர உரிமை வேண்டும்,' 'நேருவே உரிமை வழங்குவீர்', 'டில்லி சர்க்காரே நியாயம் வழங்கு', என்ற முழக்கங்களுடன் ஊர்வலமாகச் சென்று 'விடுதலை தினம்' கொண்டாடிய மாணவர்கள்மீது திரு—கொச்சி போலீசார் மிருகத்தனமாகத் தடியடிப் பிரயோகம் செய்துள்ளனர். அறப்போருக்கு ஆதரவு தரும் சென்னை மக்களை, 'விஷமிகள்' என்று பட்டம் தாணுப் பிள்ளை குற்றம் சாட்டியதுடன், 'திரு—த. நா. காங்கிரசின் அறப்போர் கண்டு திரு—கொச்சி இராஜ்யமே வெட்கப்படுகிறது', என்று நிருபர்களிடம் கூறியுள்ளார்.

ஆகஸ்ட் 11-ம் நாள் 'விடுதலை தினம்' கொண்டாடுங்கள்—என்று திரு—தமிழர் தலைவர்கள் விடுத்த வேண்டுகோள் நல்ல வெற்றியடைந்திருக்கிறது.

கடையடைப்பு, ஊர்வலம், இராஜ்ய, மத்திய சர்க்கார் அலுவலகங்கள் ஆகியவைகள் முன்பு மறியல் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கின்றன. 200 தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திரு—கொச்சி போலீசார், உரிமை வேட்கை கொண்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள்மீது தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் செய்து மிருகத்தனமாக நடந்துகொண்டதால், ஆத்திரம் கொண்ட மக்களில் சிலர் தந்தி, டெலிபோன் கம்பிகளை நாசப்படுத்தியதுடன், சர்க்கார் பஸ்கள் மீது கற்களை வீசினர் என்று தெரிகிறது.

திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற கொந்தளிப்பான நிலைமையையொட்டி, தற்காலிகமாக அறப்போரை நிறுத்திவைத்துவிட்டு அடுத்த நடவடிக்கைகள் பற்றியும், அறப்போரை தொடர்ந்து நடத்துவது பற்றியும் ஆலோசனை செய்கின்றனர்.

திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளை தாய்த் தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்த நடைபெற்ற 'விடுதலை தின'த்தன்று பட்டம் தாணு சர்க்காரின் போலீசார் மூன்று இடங்களில் மக்கள் கூட்டத்தினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நாகர்கோவிலிலிருந்து 19 மைல் தூரத்தில் உள்ள குழித்துறையில், மாணவர்கள் கூட்டத்தின்மீது திரு—கொச்சி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

(4-ம் பக்கம் பார்க்க)

திரு-கொச்சி போலீசார் வெறிச் செயல்!

மாணவர்களை மூர்க்கத்தனமாக தாக்கினர்

திரு. த. நா. காங்கிரஸ் அறிக்கை

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியினர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், 'விடுதலை தினம் வெற்றிகரமாக நடைபெற்றதென்றும், நாகர்கோவிலில் 100 தாய்மார்களும் பங்கெடுத்துக் கொண்டனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறது

குழித்துறையில் அமைதியாகச் சென்ற மாணவர்கள் ஊர்வலத்தின் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும், இதனால் பல மாணவர்கள் காயமுற்றனர் என்றும், மாணவர்கள் மீது போலீசார் மிருகத்தனமாக தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:—

"கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று மாணவர்கள் கோரியபோது அவர்கள் மீது போலீசார் சுட்டனர்; பல வீடுகளில் நுழைந்து குடியிருப்போர் மீது மிருகத்தனமாகப் போலீசார் தாக்கினர்.

புதுக்கடையில் சி. கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் போலீசார் நுழைந்து தலைவர்களைக் கைது செய்தனர்; தலைவர்களைப் போலீசார் தாக்கினர்; மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; இதனால் ஏராளமான பேர் காயமுற்றனர்; சிலர் மாண்டனர்.

தக்கலை, பள்ளியாடி, மற்றும் பல இடங்களில் போலீசார் கண்மூடித்தனமாக மக்களைத் தடிகொண்டு தாக்கினர்."

"மிருகத்தனமான செயல்!"

நேசமணி கண்டிக்கிறார்

விடுதலை தினத்தன்று ஊர்வலம் நடத்திய மாணவர்கள்மீது போலீசார் மிருகத்தனமாக தடியடிப் பிரயோகம் செய்ததாகக் கூறி தோழர் நேசமணி கண்டித்துள்ளார்.

நாகர்கோவிலில் நடைபெற்ற ஊர்வலத்தை தோழர்கள் நேசமணி, அப்துல்ரசாக், சிதம்பரநாத நாடார், ப. ஜீவானந்தம் ஆகியோர் முன்னின்று நடத்திச் சென்றனர்.

திரு—தமிழர் அறப்போர்

தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

திரு—கொச்சியில் கொந்தளிப்பு!

திருவாங்கூர்—தமிழர் அறப்போரை ஆதரிக்கும் மக்கள் நடத்திய 'விடுதலை தினத்'தில் தென் திருவாங்கூர் முழுமையும் ஒரே கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது.

போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி இவைகளால் மக்களிடையே கொந்தளிப்பு இன்னும் அதிகமாக காணப்படுகிறது!

இதனை ஒட்டி திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தனது அறப்போரைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது.

தோழர் குஞ்சன் நாடார் விடுத்துள்ள அறிக்கையில், நிலைமையற்றி ஆலோசனை நடத்தவே அறப்போர் நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும், தமிழர் தலைவர்கள் கூடிப் பேசி, அடுத்து, எப்படி போராட்டத்தை நடத்துவதென்று தீர்மானிப்பார்கள் என்று கூறுகிறார்.

சென்னை மாநில 'விஷமிகள்' உதவுகிறார்களாம்!

திருவாங்கூர் தமிழர் இயக்கம் கண்டு வெட்கப்படுகிறாராம்!

பட்டம் தாணுவின் அறிக்கை

திருவனந்தபுரம், ஆக. 11—

"திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் சரியான நோக்குடன் செல்லவில்லை; சர்க்கார் பலாத்காரச் செயல்களைக் கண்டு வாளாயிருக்க இயலாது; இக்கட்சியின் தலைமைப்பீடம் பாராளுமன்ற, சட்டசபை உறுப்பினர்கள் போன்றவர்களிடம் இருப்பது கண்டு இந்த மாநிலமே வெட்கப்படுகிறது,"

என்று 'விடுதலை தினம்' பற்றி நிருபர்களிடம் பேசுகையில் திரு-கொச்சி முதல் அமைச்சர் தாணு பிள்ளை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:—

"இன்று சில இடங்களில் நடைபெற்ற பலாத்காரச் செயல்களை அடக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திருவாங்கூர் தமிழர் நாடு காங்கிரஸ், இராஜ்யத்தில் குழப்பத்தை உண்டுபண்ணி சர்க்காருக்குத் தொல்லைத் தரவே இக்கிளர்ச்சியை நடத்துகிறது.

இக்கிளர்ச்சி வலுப்பெற சென்னை மாநிலத்திலுள்ள சில 'விஷமிகள்' உதவுகின்ற போக்கும், கம்யூனிஸ்டுகளின் போக்கும் கண்டிக்கத்தக்கது."

காந்திராமன் உடல்நிலை

திருவாங்கூர் தமிழர் அறப்போரில் உண்ணாவிரதம் இருக்கும் தோழர் காந்திராமன் பேசவும் சக்தியற்று மயக்க நிலையிலிருப்பதாக செய்தி ஒன்று கூறுகிறது.

தி-கொ. சர்க்கார் அறிக்கை

திருவனந்தபுரம், ஆக. 11—

"தந்திக் கம்பிகளை நாசம் படுத்துதல், டெலிபோன் கம்பிகளை நாசப்படுத்துதல், சர்க்கார் பஸ்கள் மீது கல்லெறிதல் போன்ற பலாத்காரச் செயல்கள், குழித்துறை, அருமனை, தக்கலை, நாகர்கோவில், பூதப்பாண்டி, செங்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றன," என்று திரு—கொச்சி சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த ஒழுங்கு மீறிய செயல்கள் திரு—த. நா. காங்கிரசார் கூறும் 'விடுதலை தினம்' என்பதை ஒட்டி நடைபெற்றன என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

தோவெட்டி என்னும் ஊருக்கு அருகே இரண்டு இடங்களில் மாலை 2 மணி முதல் 3 மணிக்குள் போலீசார் நிலைமையைச் சமாளிக்கத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; இதன் காரணமாக மூன்று பேர் மரணமடைந்தனர்.

புதுக்கடையில் போலீஸ் ஸ்டேஷனுக்கு தீ வைக்க முயன்றனர் என்றும், ஆகவே போலீசார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர் என்றும் இதன் காரணமாக ஒருவர் மாண்டார்; மற்றொருவர் காயமுற்றார் என்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

திருவனந்தபுரம் டி.எஸ்.பி. தென் திருவிதாங்கூரில் இருக்கிறார். நிலைமை கவனிக்கப்படுகிறது என்று சர்க்கார் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

பட்டம் தாணு பயமுறுத்துகிறார்!

'அறப்போரை அடக்கி விடுவேன்' என ஆர்ப்பரிக்கிறார்!

திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம்தாணு பிள்ளை பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில், திரு—தமிழ் நாடு காங்கிரசின் பலாத்காரப் போக்கை அனுமதிக்க முடியாதென்றும், இப்போர் நீடிக்குமேயானால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு திரு—த. நா. காங்கிரஸ் போராட்டத்தை அடக்குவோம் என்றும் கூறியுள்ளார்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—8—54 வியாழன்

உபசாரமா? உள்ளன்பா?

கிருஸ்தவ பாதிரிகள்மீது—குறிப்பாக வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து பணியாற்றும் கிருஸ்தவப் பாதிரிகள்மீது, வடநாட்டிலுள்ள சில தலைவர்கள், இந்து மதத்தின் காவலர்களாகத் தம்மைத் தாமே நியமித்துக் கொண்டவர்கள், பகை கக்கி வருகின்றனர்; மதமாற்றத்தை இனி அனுமதிக்கப் போவதில்லை என்று முழக்கமிடுகிறார்கள்; மதம் மாறிவிட்டவர்களையும், மீண்டும் புனித நீராட்டி, 'சுத்தி' செய்து இந்துக்கள் ஆக்கிவிடும் கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்யப் போவதாகச் செப்புகிறார்கள்.

இந்தச் செயலின் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதைவிட, மும்முரமாக, கிருஸ்தவப் பாதிரிகளைக் கண்டபடி ஏசுவதிலும், வெளிநாட்டுக் கிருஸ்தவப் பாதிரிகளுக்கு எதிர்ப்புக் காட்டுவதிலும் ஈடுபட்டு, சச்சரவும், கிலேசமும், பகையும், புகையும் எழச் செய்கின்றனர்.

மத வெறியையும், அதன் விளைவான மனமாச்சரியத்தையும் வடநாட்டிலே எளிதில் கிளப்பிவிட முடிகிறது; பகுத்தறிவுப் பிரசாரம் அங்கு போதுமான அளவிலோ, தகுந்த முறையிலோ நடத்தப்படவில்லை — கும்பமேளா நடாத்தும் இடம்!! எனவே, இந்தப் புதிய பூசலுக்கு அங்கு வசதி கிடைத்து வருகிறது.

இப்போது நேரு பண்டிதர் இந்தப் போக்கைக் குறை கூறியும், பாதிரிகள்—குறிப்பாக வெளிநாட்டுப் பாதிரிகள் இங்கு செய்த நல்ல காரியங்களைப் பாராட்டியும் கருத்துரை அனுப்பியுள்ளார். காலங் கடந்து வருகிறது என்ற போதிலும், அதற்கே எங்கதிலே திருப்தி அடைகிறோம்.

ஆனால், பண்டிதரின் கருத்துரைக்குக் காரணம் யாது? இந்தப் போக்குக்குக் காரணம் என்ன? உபசாரமா? உள்ளன்பா? எது தூண்டிற்று, என்பது விளங்கவில்லை.

வெளிநாட்டுக் கிருஸ்தவப் பாதிரிகளை எதிர்க்கும் போக்கு பற்றி, ஒவ்வொரு நாளும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றுள்ள நேரு பண்டிதரிடம், பலர், குறை கூறிக்கொண்டிருப்பர்! "இதுதானா உங்கள் நாட்டின் போக்கு? தர்மசக்கரம் என்பதன் போக்கிபதை இதுதானா? எங்கள் நாட்டவரையும், மதத்தவரையும், இங்கு, இழித்தும் பழித்தும் பேச, எப்படி அனுமதிக்கிறீர்கள்? எமது உறவையும் உதவியையும் மிக மிகத் தாராளமாகப் பெறுகிறீர்; எமது உரசல் உல்லாசமளிக்கிறது என்கிறீர்; இங்கோ, பகை கக்குகிறார்கள், உம்மவர்! இது என்ன போக்கு?" என்று வெளிநாட்டுத் தலைவர்கள் கண்டித்திருக்கக்கூடும்.

அவர்களை மகிழ்விக்க, நேரு பண்டிதர் இப்போது அறிக்கை விட்டு, கிருஸ்தவப் பாதிரிகளைப் பாராட்டுவதாகக் காட்டிக் கொள்வது போல, உபசாரம் பேசியிருக்கக்கூடும் என்றே நாம் எண்ணுகிறோம்.

உள்ளன்பு இருந்திருக்குமானால், காரணமற்று, கடுமொழி வீசி, மொழி மறக்கப் பேசும் பண்டிதர், இந்தப் போக்கு முளைத்தபோதே கண்டித்திருக்க மாட்டாரா?

மதவெறி தலைவிரித்தாடுகிறது, கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்!

கும்பமேளா போன்ற பேயாட்டம் நடைபெறுகிறது, கண்டிக்க மறுக்கிறார்!

மாறாக, 'அதிலேயும் ஒரு மகத்தான ஜனசக்தி இருக்கத்தான் செய்கிறது,' என்று 'ஜீவானந்தம்' செய்கிறார்!

இப்போது கிருஸ்தவப் பாதிரிகளுக்காகப் பரிந்து பேசுகிறார்! காரணம், உள்ளன்பு அல்ல; உபசார முறைகளிலே இஃதொன்று, என்பதுதான்!

உண்மையை, அவரையும் அறியாமல், அவரே, தமது அறிக்கையில், சிறிதளவு நடமாடவிட்டிருக்கிறார்!

கிருஸ்தவர்கள் முதலிய மைனாரிட்டிகள் இங்கு உள்ளனர்; அவர்களின் மனம் புண்படும் காரியம் எதனையும் நாம் செய்திடல் ஆகாது—என்று கூறுகிறார். பொருள் என்ன?

நாட்டிலே, கிருஸ்தவர்கள் உள்ளனர்; அவர்களிடம் 'ஓட்' இருக்கிறது; அது நமக்கு வேண்டும்; ஆகவே, அவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்க வேண்டும்!!—இதுதானே உட்பொருள்!

எனவேதான், நேரு பண்டிதரின் அறிக்கை, உபசாரம், உள்ளன்பின் விளைவு அல்ல—என்று கருத இடமேற்படுகிறது!

பகவான் பத்து அவதாரம் எடுத்த புண்ணிய பூமியில் பஞ்சம் ஏன்?

வாழ வழி தர இயலாத வரட்டு வேதாந்தம்

நாட்டு மக்களைப் பிடித்துள்ள நோய் போக மாமருந்து!

பகுத்தறிவுப் பணியின் மேம்பாடு குறித்து அண்ணாதுரை

"பகவான் பத்து அவதாரம் எடுத்தது, இந்தப் புண்ணிய பூமியில்தான்! ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்து விளையாடுவோரும், ஜீவன் முக்தர்களும், தவசிகளும், அருளாளரும் அடிக்கடிக்காக வந்துபோனது, இங்குதான்! ஒரு அவதாரம்கூட அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ எடுக்காமல், பத்து அவதாரமும் இங்கேயே தான் எடுத்தார்! பெருமையாகப் பேசுகிறார்கள் புராணீகர்கள்! இப்படிப்பட்ட புண்ணிய பூமியில், ஏன், இவ்வளவு பஞ்சம், பட்டினி, பதைப்பு, கொடுமை? எண்ணிப் பார்த்தீர்களா?"

—என்று, பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பட்டுக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழக மூன்றாம் ஆண்டு விழாவில் கூடியிருந்தோரை நோக்கிக் கேட்டார்.

ஆண்டு விழாக் கூட்டம் 7—8—54 மாலை 6-மணிக்கு நடைபெற்றது. ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். தாய்மார்கள் பெருமளவில் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தோழர் ராமலிங்கம் தலைமை வகித்தார். செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சிபுரம் நகராட்சி மன்ற உறுப்பினர் சி. வி. ராஜகோபால், தோழர் அ. பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மேலும் பேசியதாவது:—

"வாழ வழி தராத வரட்டு வேதாந்தத்தைப் பேசிக்கொண்டும், இருப்பதை மறந்தும் இல்லாததை எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டும் நமது நாட்டு மக்கள் கலிகிறார்கள்; புண்ணிய பூமி இது என்று பெருமையுடன் பேசுகிறார்கள்.

ஆண்டவன் இவ்வளவு அவதாரம் எடுத்த புண்ணிய பூமியின்நாடு. இவ்வளவு பஞ்சம் இருக்க வேண்டும்?

நாடு, வளமற்றதல்ல; நாமும் பாடுபடாதவர்களல்ல; பக்தியிலே எந்த நாட்டாரையும் மிஞ்சக்கூடியவர்கள் நாம் என்றாலும், மக்கள் வறுமையில் உழல்கிறார்களே, ஏன்? இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது.

மதவாதிகள், மக்கள் இறந்த பிறகு, மேல் உலகில் பெற வேண்டிய இன்பம் எப்படிப் பட்டது என்பது பற்றிப்பேசி, அந்த இன்பம் பெறுவதற்கான வழி கூறுகிறார்கள்! அவர்கள் கூறிடும் அந்த இன்பத்தை ரசித்தவர்கள் எவராவது நம்மிடம் வந்து, இப்படி இப்படி இருக்குமென்று கூறினதில்லை!!

திராவிட முன்னேற்றக் கழகம், இங்கே வாழ வழி என்ன? மானத்தோடு வாழும் மார்க்கம் என்ன? சுரண்டல், சுயநலம் இன்றி, எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழும் வழி என்ன? — என்பது பற்றி எடுத்துக் கூறுகிறது.

காமதேனுவின் மதுரமான பால் குடித்துவிட்டு, கற்பக விருட்ச நிழலில் படுத்துத் தூங்கி, மேனகை தட்டி எழுப்ப, எழுந்திருந்து, ரம்பையின் நாட்டியத்தைப் பார்த்துக் களிப்பதையும் மேல் உலக வாசி, எப்படி இருக்கிறான் என்பதை நாம் யாரும் கண்டறிய முடியாது; ஆனால், வாழ்வில் நிம்மதி பெற்று, குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழ்வது கண்டு மகிழ்பவரைப் பார்க்க முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம், எல்லா மக்களுக்கும் அத்தகைய இன்ப வாழ்வு கிடைக்கத்தக்க திட்டம் தேவை என்று வலியுறுத்துகிறது. திராவிடநாடு திராவிடருக்கானால்தான் இது சாத்தியமாகும்" என்று பேசிவிட்டு, திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினையை விளக்கிப் பேசினார்.

உண்மைதான்!

"திராவிடர் கழகம் நடத்திய இந்தி அழிப்புப் போரில், நமது கழகத் தோழர்கள் சிலர் கலந்து கொண்டது உண்மைதானா? பத்திரிகைகளில் செய்தி கண்டோமே!" என்று அன்பர் சிலர் கேட்கின்றனர்.

உண்மைதான், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், தனிப்பட்ட முறையில் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடுவது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆர்வமிக்க சில தோழர்கள், கிளர்ச்சியில் ஈடுபட்டனர்; திராவிடர் கழகம் இது கண்டு மகிழ்கிறதா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது.

கிளர்ச்சியில் கலந்துகொண்ட நமது தோழர்களும் உணர்ச்சியால் உந்தப்பட்டுச் சென்றார்களேயொழிய, நன்றியை எதிர்பார்த்தல்ல!

"திராவிடர் கழகம் நடத்தும் கிளர்ச்சியில் நாங்கள், அது பொதுப் பிரச்சினை என்பதற்காக ஈடுபட்டோமே, அதே போல, எங்கள் கழகம் நடத்தும் கிளர்ச்சிக்குத் திராவிடர் கழகத் தோழர்கள், தனிப்பட்ட முறையிலேனும் ஆதரவு அளிப்பார்களா? ஆதரவு தராவிட்டாலும், எதிர்ப்புக் காட்டுவதும், ஏளனம் செய்வதுமாவது செய்யாமலிருப்பார்களா," என்றுகூட நமது தோழர்கள் கேட்கவில்லை—கேட்கமாட்டார்கள்!

திராவிடர் கழகம், அவர்கள் இருந்த இடம்; பிறந்த இடம்! பாசம் விடாது!!

'அந்தப் பாசம் அங்கே காணோமே,' என்று கேட்பீர்கள்; ஆமாம்! ஆமாம்! காணோம்! என் செய்வது!!

மகிழ்ச்சி!

திரு—கொச்சி தமிழர்கள் நடத்தும் அறப்போரில் ஈடுபட, தமிழரசுக் கழகம் சென்னையிலிருந்து ஒரு படை அனுப்புவது அறிந்து மகிழ்கிறோம்.

ஆயிரத்தெட்டு கருத்து வேற்றுமைகள் உள்ளன—மறைக்கத் தேவையில்லை; படை, பட்டம் மீது பாயும் போக்கோடு போக்காக, நமது கழகத்தையும்தான் தாக்கும்; பரவாயில்லை; படை கிளம்புகிறதே, என்பதிலே நமக்கு மகிழ்ச்சி.

திரு—கொச்சி தமிழர்களின் எழுச்சி, காணத்தக்கதோர் காட்சியாக இருக்கிறது. எத்தனைய இடுக்கண் நேரிடினும் தாங்கிக் கொள்ளும் நெஞ்சு உரம் நிரம்ப அவர்களுக்கு இருக்கிறது; தாயகத்திலிருந்து, தங்கள் துணைக்காகப் படை ஒன்று வருவது கண்டு அவர்கள் பூரிப்பு அடைந்து, அடக்கி ஆள எண்ணுவோரிடம், 'தாயகம் எமக்கு அளிக்கும் ஆதரவு காணீர்,' என்று பெருமையுடன் கூறிக்கொள்வர். புத்தார்வம் பூத்திடும்; எனவே, பிரச்சினையை ஆதரிக்கும் கட்சிகள் யாவும், படை அனுப்பியும், வேறு பல்வேறு வகையான உதவிகள் தந்தும், அறப்போருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திடல் வேண்டும்.

தமிழரசுக் கழகம் அனுப்பும் படை, இத்தகைய 'தொண்டு' செய்வதாகும் என்ற முறையில், மகிழ்கிறோம்! செல்க! வெல்க! என்று வாழ்த்துகிறோம்!!

செஞ்சீனாவுக்கு ஐ. நா. சபையில் அனுமதி?

அமெரிக்கா ஐ. நா.-வை விட்டு வெளியேறாது!

அமெரிக்க மக்கள் கருத்து!

பிரின்ஸ்டன் (நியூஜெர்ஸி) ஆக. 11—

"கம்யூனிஸ்டு சீனா, ஐ. நா. சபையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் ஐ. நா.-வை விட்டு அமெரிக்கா வெளியேறக் கூடாது,"

என்று, அமெரிக்கர்களில் பெரும்பான்மையோர், இங்கு அறிவிக்கப்பட்ட பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் முடிவுகள் கூறுகின்றன!

"ஐ. நா. சபையில் உள்ள பெரும்பான்மை நாடுகள், செஞ்சீனா ஐ. நா.-வுக்குள் நுழைய அனுமதிக்கத்தான் வேண்டுமென வோட்டளிப்பதாக வைத்துக் கொண்டால், அமெரிக்கா, ஐ. நா. சபையில் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமா, கூடாதா என்பது பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்கப்பட்டதாம்!

ராஜினாமா செய்யக் கூடாதென 59 சதவிகிதமும் ராஜினாமா செய்ய வேண்டுமென 25 சதவிகிதமும், அபிப்பிராயம் எதுவும் சொல்லாத நடுநிலைமை 16 சதவிகிதமும் முடிவுகள் இருந்தனவாம்!

இந்த பெரும்பான்மையினரின் முடிவு நியூயார்க்கில் உள்ள ஹாரிமான் எனும் இடத்தில் சென்ற வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட 50 அமெரிக்க பிரமுகர்களின் முடிவை ஒத்ததாக இருக்கிறது என்றும் அறிவிக்கப்படுகிறது.

மக்களாட்சி வளர்ந்து வருவது; வளராமல் நிற்பதன்று. அது பரவப் பரவச் சரியானதாக ஆகி வருவது. அதனை நாம் எளிதாக இழந்துவிட முடியும்; ஆனால், அதனை முற்றும் பெற்றுவிட முடியவே முடியாது. நித்திய போராட்டமே அதன் தன்மை!

—நீதிபதி ராபர்ட் எச். ஜாக்சன்

அனைவர் ஒத்துழைப்பும் கோரப்படும்

திரு—தமிழர் தலைவர் நேசமணி அறிவிப்பு

தி.மு.கழக திட்டம் பற்றி ஆலோசனை

நாகர்கோவில், ஆக. 10— சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நேசமணி அவர்கள், மற்ற கட்சியினரைக் கலந்தாலோசித்தார்.

விடுதலை செய்யப்பட்ட தலைவர்கள் அனைவருக்கும் நல்லதோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அறப்போர் தொடர்ந்து நடைபெறும் என்றும், மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி யோசிப்பதாகவும் தோழர் நேசமணி நிருபர்களிடம் கூறினார்.

இதர கட்சிகளின் ஒத்துழைப்பு பற்றி அவர் பேசுகையில் "அறப்போர் திட்டங்களை தமிழரசுக் கழகத் தலைவர் சிவஞானமும், இரு ஸ்தல கம்யூனிஸ்டு கட்சியினரும் ஏற்றுக் கொண்டபோது இப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் கருதப்பட்டது. தி. மு. கழகம் முதலில் வகுக்கப்பட்ட முறையை ஏற்க மறுத்தது; தி. த. நா. கா. தலைமையின் கீழ் போராட்டம் நடத்த வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், கம்யூனிஸ்டுகள் இப்போது கூட்டுக் கமிட்டி வேண்டுமென்று கோருகின்றனர்," என்று கூறினார்.

"என்ன செய்ய வேண்டுமென்று தி மு. கழகத்தினரும் கம்யூனிஸ்டுகளும் விரும்புகிறார்கள் என்பது பின்னர் யோசிக்கப்படும். எங்களுடைய குறிக்கோள் ஐக்கிய தமிழகம்; அதைப் பெற எல்லா சக்திகளும் திரட்டப்படும்" என்று நேசமணி கூறினார்.

திரு—த. நா. கா. ஆதரவிலேயே அறப்போர் நடத்த அவர்கள் விரும்புவதாகவும், அதற்கு மற்றவர்கள் ஒத்துழைப்பு வரவேற்கப்படுமென்றும் தெரிகிறது; அடுத்த போராட்டம் வரிகொடா இயக்கமாக இருக்குமென்றும் நேசமணி கூறினார்.

நாகர்கோவிலில் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசும்போது 'தேவிகுளத்தில் 144 தடை உத்தரவு இல்லை என்றாலும் ஐ. பி. கோ 107-வது விதியை ஆட்சேபித்து போர் நடைபெறும்' என்று நேசமணி கூறியுள்ளார்.

★

பலவீனப்படுத்த செய்த சூழ்ச்சி

அறப்போர் சர்வாதிகாரி குஞ்சன் நாடார் விடுத்த அறிக்கை ஒன்றில், 'தலைவர்களை விடுதலை செய்தது, போராட்டத்தைப் பலவீனப்படுத்த அரசாங்கம் செய்துள்ள சூழ்ச்சி' என்றும், போராட்டம் தீவிரமாக நடைபெறும் என்றும், முக்கியமாகச் சர்க்கார் கட்டிடங்கள் முன்னிலையில் மணிக்கு மணி தொண்டர்கள் மறியல் நடக்கும்' என்று கூறியுள்ளார்.

• • •

உண்ணாவிரதம் இருக்கும் காந்திராமனின் உடல்நிலை பலவீனமாக இருப்பதாக டாக்டர் கூறியுள்ளாராம்.

★

உண்ணாவிரதமிருக்கும் தோழர் காந்திராமன் வேண்டுகோள்

தன்னுயிர் ஈந்தும் ஐக்கிய தமிழகம் அமைக்க அணி திரண்டு நிற்கும் தமிழ் பெருங்குடி மக்களே! வணக்கம்!

திரு. த. நா. காங்கிரசின் போர் முழக்கம் கேட்டு இந்தியாவின் பிரதமர் நேரு, போராட்டத்தை நிறுத்தவேண்டுமென்று வேண்டுகோள் விடுகிறார்.

திரு—தமிழ்ப் பிரதேசங்கள் மலையாளிகளின் காலனியாக ஆக்கப்பட்டிருப்பதை பண்டித நேரு அறிந்திருக்க முடியாது; திரு—தமிழர்கள் சாண்டப்படுவதை, அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவதை, தேவிகுளத்தில் நமது சகோதரிகள் கற்பழிக்கப்படுவதை, அதை எதிர்க்கும் தமிழ் பெருங்குடிமக்கள் அடக்குமுறையால் ஒழிக்கப்படுவதை பண்டிதர் அறியமாட்டார்!

திரு—தமிழக மக்களின் லட்சியமான திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகள் தாய் தமிழகத்தோடு சேரவேண்டுமென்ற ஆர்வத்தை அடக்குமுறைகள் மூலம் சிதைக்க முடியாது.

இந்தப் பகுதியில் மனிதன் மானமாக வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்ட காரணத்தால் திரு. த. நா. கா. போர்ப் பிரகடனம் செய்தது. இன்று மூன்றரை கோடி தமிழர்களும் கட்சி பாகுபாடு பாராமல் ஒற்றுமையாக நின்று, 'ஐக்கிய தமிழகம் அமைப்போம்; அல்லது அடக்குமுறையால் செத்து மடிவோம்,' என்ற நிலைக்கு வந்தனர். இந்தச் சூழ்நிலையில் எவ்வித உத்திரவாதமுமின்றிப் போரை நிறுத்தவேண்டுமென்று நேரு சொல்வது நியாயமா?

கேரளிய வெறி பிடித்த சர்தார் கே. எம். பணிக்கரின் தீர்ப்புக்கு தமிழர்கள் கட்டுப்பட வேண்டுமென்று பிரதமர் எண்ணுவதானால், ஆட்டுக் குட்டிக்கு ஓநாய் தீர்ப்பு கூறுவது போலாகும்!

திரு—தமிழகத்தில் ஏழு பேர் இருக்கவேண்டிய சிறைச்சாலைகளில் 20-30 பேர்களை புளி மூட்டைகள்போல அடைத்துவைத்திருக்கும் பி. எஸ். பி. சர்க்காரின் அநீதியை அகில இந்திய மக்களுக்கு—குறிப்பாக தமிழக மக்களுக்கு உணர்த்தவும், இந்த அநீதியை ஒழிக்கவும், போராடி வெற்றி பெறவும், திரு—தமிழ் மக்களின் உள்ளக்கொதிப்பையும் திரு—தமிழகத்தின் உண்மை நிலையையும், நேரு அவர்களுக்கு எடுத்துக் காட்டும் பொருட்டு 6—8—54 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் நான் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறேன். இதோடு ஆகஸ்ட் 9-ந் தேதி முதல் எனக்கு சக்தியும், ஆர்வமும் இருக்கும் நாள் வரை தினசரி பகல் 9 மணி முதல் 11 மணி வரை நானும், தோவாளை தோழர் ஏ. சிவதாணுவும், மற்றும் ஊழியர்களும் சேர்ந்து வக்கீல்கள் அலுவலகத்தில் சென்று, தமிழ் மொழி ஆட்சி மொழி ஆவதற்கு வக்கீல்கள், குமாஸ்தாக்கள் மற்றும் முன்ஷிகள் எல்லோரிடமும் சென்று, தமிழிலே எழுதும் இயக்கத்தை நடத்துவேன்."

குறிப்பு:—இத்துடன் இங்குள்ள நிலைமைகளை விளக்கி பிரதமர் நேருவுக்கு கடிதம் எழுதியுள்ளேன்; கூடிய சீக்கிரம் அக்கடிதம், தமிழ்ப் பெருமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

—ஏ. காந்திராமன்

அடிமையாக நான் இருக்க மாட்டேன்; ஆதலால் ஆண்டானாகவும் நான் இருக்க மாட்டேன். இது மக்களாட்சி என்பதற்கு நான் கொள்ளும் கருத்தை விளக்கும். இதற்கு வேறுபட்டது எதுவும் மக்களாட்சி ஆகாது!

—ஆபிரகாம் லிங்கன்

ஆரணியில்

தி. மு. க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

★

14—8—54 மாலை 6 மணிக்கு ஆரணி, கோசப்பாளையம் தர்மராசா கோயில் எதிரில் தி மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் அண்ணாதுரை, அ. பொன்னம்பலனார், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

நகர மன்ற வரவேற்பும் திரு வி. க. படத்திறப்பும்

14—8—54 மாலை 5 மணிக்கு ஆரணி நகர் மன்றத்தில் தோழர் அண்ணாதுரை அவர்களால் மறைந்த தமிழ்த் தென்றல் திரு வி. க. அவர்கள் படத்திறப்பும், தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பும் நடைபெறும்.

ஆந்திராவில் பி.-சோ. கட்சித் தலைவர்கள் கைது!

கர்னூல், ஆக. 9— ஆந்திர பி.—சோ. கட்சித் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான கொம்மி ரெட்டி என்பவரும், இன்னும் பதினொரு தோழர்களும் விவசாயிகளின் அறப்போரில் கலந்து கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள், 'காரிவெலு' என்ற கிராமத்தில் ஒரு மிராசுதாரரின் நிலங்களில் விவசாயிகளுடன் நுழைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது.

காலை 11-30 மணிக்கு இந்த அறப்போர் வீரர்கள் வயல்களில் பயிர் செய்வதற்காக நுழைந்த பொழுது கைது செய்யப்பட்டதாகவும், அவர்கள் அத்துமீறி பிரவேசித்தார்கள் என்ற குற்றச் சாட்டுடன் நீதி மன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் கே. வி. எஸ். பி. ராஜி என்ற எம். எல். ஏ., ஸ்ரீதர சேஷ சர்மா என்ற கர்னூல் மாவட்ட பி.சோ. கட்சித் தலைவர் ஆகியோர் முக்கியமானவர்கள் எனத் தெரிகிறது.

கொழும்பு மாநாடு

கொத்தலாவலையின் பிடிவாதம்!

கொழும்பு, ஆக. 10— 'தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தம் பற்றி ஆலோசனை செய்ய இரங்கூனுக்குப் பதில் டில்லியில் கொழும்பு அரசுகளின் மாநாட்டை நடத்தினால் மாநாட்டிற்கு வர இயலுமா?' என்று இந்தியப் பிரதம மந்திரி நேருவை இலங்கைப் பிரதமர் கேட்டிருக்கிறார் என்று அதிகாரவட்டாரங்களில் கூறப்படுகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்னர், 'மாநாட்டிற்கு வர இயலாது,' என்று நேரு அனுப்பிய கடிதத்திற்குப் பதில் அனுப்பும் வகையில் இக் கடிதத்தை கொத்தலாவலை அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

இந்த மாநாட்டிற்கு வர இயலாது என்று இந்தோனேஷியாவும் தெரிவித்துவிட்டது.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானா? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகப் பொதுச் செயலாளர் கூறியது தவறா? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில முன்னர் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

ஐயா,

கவர்னர் சம்பளம் குறைக்கப்பட வேண்டியது முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்; இப்போது நாட்டை ஆளும் தேசியவாதிகள், ஆட்சிக்கு வருமுன்னர், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கவர்னர் சம்பளம் 500-ரூபாய்க்கு மேல் இராது; இந்த தனிப்பட்ட பதவிக்காக ஏன் ஆயிரக்கணக்கில்?' என்றெல்லாம் சண்டமாருதம் செய்தனர்; ஆட்சிக்கு வந்த பின்னர், கவர்னருக்கு ஏன் இப்போது லட்சக்கணக்கில்? இந்த அரும்பணியை (பொருளாதார நெருக்கடியுள்ள நம் நாட்டில்) எடுத்துக் கொண்டதற்காக, நாட்டின் நலனிலே நாட்டம் கொண்ட எவரும் இப்போராட்டத்தை ஆதரிக்கத்தான் செய்வார்கள் — ஆதரிக்கத்தான் வேண்டும்.

எ. எம். வேதகிரி
சென்னை, 21

★

ஐயா,

நம் கவர்னர் ஆண்டொன்றுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளமாகப் பெறுகின்றார். வஞ்சனையில்லாமல் வாங்கிக் கொள்ளுகிறார்! அவர் நமக்கு சாதித்தது என்ன? அவர் நமக்குச் செய்த நன்மை என்ன? பல இடங்களிலே மரம் நடு விழா என்ற பெயரால் நடைபெறும் செலவினங்களில் பயன் பெறுகின்றார்; கட்டிடங்களைத் திறந்து வைக்கின்றார்; கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கின்றார்; ஆங்கிலப் பிரசாரம் செய்கின்றார்; இவற்றைத் தவிர அவர் நமக்குச் செய்தது என்ன? இத்திருப்பணிகளெல்லாம் நாட்டு மக்களுக்கு அவசியமானதா? தேவையானதா?

ஒரு தனி மனிதனுக்கு ஒரு ஆண்டுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் ஒரு கிராமமே சீரமைக்கப்படுமே!

அ. துரைசாமி
மாணவன்

★

ஐயா,

காரைக்குடியில் கூடிய காங்கிரசு கவர்னர் சம்பளத்தைக் குறைக்க தீர்மானம் இயற்றியது. அதே கட்சிதான் இன்று நம்மை ஆளுகிறது. அந்த ஆளும் வர்க்கத்திடம்தான் கவர்னர் சம்பளத்தைக் குறை என்று கூறுகிறோம்.

கவர்னர் சம்பளம் என்ற பெயரில் லட்சக்கணக்கான பணம் பாழாவதை எவரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சீனாவின் மக்கள் தலைவர் மாசேதுங்குக்கு கொடுக்கும் சம்பளம்கூட குறைவானது. ஆனால் ஒட்டிய வயிரோடு ஓட்டைக் குடிசையில் ஒண்டி வாழும் மக்கள் நிறைந்த பாரதத்தின் பாதுகாவலர்களுடைய சம்பளப் பட்டியலோ பெரிது. சம்பளத்தைக் குறைக்க கோரிக்கை விடுத்தால் அது செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகும்.

காங்கிரஸ் அன்று கூறியதைத் தான் இன்று நினைவூட்டுகிறோம். தீட்டிய தீர்மானத்தை நடைமுறையில் கொண்டுவந்து நாட்டுக்கு நன்மை செய்யுங்கள் என்றுதான் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இதை மறுத்தால் அறப்போர் ஆரம்பமாவது திண்ணம்.

க. சிவகாமிநாதன்,
விருதை.

ஐயா,

வீரமெற்று எழுந்துள்ள ஓர் விடுதலை இயக்கம், ஆதிக்கப் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதுவும், எந்நேர்ந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும், எவரையும் பாதிக்காமலிருக்க வேண்டும் என்றெல்லாம் நியாய விளக்கம் தேடிக் கொண்டிருப்பதில்லை.

கவர்னர் சம்பள குறைப்புப் போராட்டம் என்பது குறைபிடிப்பதும் ஏழை மக்கள் வரிப் பணத்தின் பாதுகாப்புப் போராட்டம்; நாயகக் கோட்டத்தில் கொலுவீற்றிருக்கும் ஆதிக்க அதிபருக்கு நம் சுதந்திர உணர்ச்சியை அறிவுறுத்தும் போராட்டம்; வடநாட்டு சுரண்டலாட்சியின் தாசர்கள் யார்? ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் யார்? என்பதை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் போராட்டம்; அது மட்டுமல்ல, நமது உயிர் இலட்சியமாம் திராவிடத்தைப் பெற நடத்தப் போகும் போராட்டங்களுக்கு இதுவும் ஓர் முன்னறிவிப்பு!

சே. து. சஞ்சீவி
சேத்துப்பட்டு, சென்னை

★

ஐயா,

தென்னாட்டின் மீது வடநாட்டார் ஆதிக்கம் செலுத்துவதன் சின்னமாக விளங்குவதே கவர்னர் பதவி. அத்தகைய அமைச்சின்னத்திற்கு ஆண்டொன்றுக்கு பத்துலட்சம் ரூபாய் சம்பளம்—அலவன்ஸ் என்ற பெயரால் செலவிடுவது அறவே கூடாது. ஆட்சிக்கு வருவதற்கு முன் காங்கிரஸ் கண்ணியர்கள் கூறியதைப் போல—ரூ. 500-க்கு மேல் சம்பளம் தரக் கூடாது. எனவே, கவர்னர் சம்பளக் குறைப்பு போராட்டத்திற்கு தமிழகம் தயார்.

எம். பி. எஸ். பழனிசாமி,
எம். எஸ். சாகுல் அமீது,
எம். அப்துல் சத்தார்,
ம. துரைராஜ்,
ஏ. முத்து.
பொள்ளாச்சி.

★

ஐயா,

இன்று நாட்டில் சாதாரண நெசவுத் தொழிலாளர்கட்கு நிவாரணம் அளிக்க அரசாங்கத்தாரிடம் பணம் இல்லை என்று வெறும் கையைக் காட்டுகிறார்கள்.

நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயிகட்கு பொருளுதவி கோரினால் அதற்கும் அரசாங்கத்திடம் பணம் இல்லை.

கிராமாந்திரங்களில் பாதை வசதி இல்லாமல் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள்; அந்த வசதி செய்து கொடுப்பதற்கும் பணம் இல்லை.

பகல் முழுவதும் திராவிடச் செல்வர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கட்கு கொடுக்கப்படும் சம்பளம் அவர்களின் வாழ்க்கைக்கே போதாத முறையில் கஷ்டப்படுகிறார்கள். அவர்கட்காவது சம்பள உயர்வு கேட்டால், ஆச்சாரியார் ஆட்சி பீடத்தில் இருக்கும்போது, 'ஆசிரியர்கள் அனுபவ சேவை செய்கிறார்கள்,' என்று கூறினார். ஆனால் கவர்னருக்குக் கொடுக்கப்படும் செலவுப் பணம் ரூ 10 லட்சம்!

அ. மு. அருணாசலம்,
புலியங்குடி.

அட்லி—ரஷ்யப் பிரதமர் சந்திப்பு

மாஸ்கோ, ஆக. 11—

பிரிட்டனின் முன்னாள் முதன் மந்திரி அட்லி தலைமையில் சீனாவிற்குச் சென்றுகொண்டிருக்கும் தொழிற் கட்சி நல்லெண்ண தூதுக் குழு, சீனா செல்லும் வழியில், மாஸ்கோவில் இரண்டு தினங்கள் தங்கிற்று.

சோவியத் ரஷ்யப் பிரதமர் மாலன்கோவ், அட்லியையும் குழுவினரையும் வரவேற்று விருந்தளித்து சாரம் நடத்திருக்கிறார். நான்கு மணி நேரம் நடைபெற்ற அந்த விருந்தில், மாலன்கோவும், அட்லியும் உலகெங்கும் நிலவிக்கொண்டிருக்கிற பல பிரச்னைகள் பற்றி மனம்விட்டுப் பேசிக்கொண்டதாக தெரிகிறது.

பிறகு மாஸ்கோவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் இரவு விருந்து நடைபெற்றபோது, அந்த மாளிகைக்கே முதன் முறையாக, சோவியத் பிரதமர் மாலன்கோவ், வருகை தந்து விருந்துண்டதுடன் அட்லியுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

தோழர் மாலன்கோவ் பல முறை அட்லியிடம் பேசினாராம்.

"பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்புகொள்ள ரஷ்யா விரும்புவதாக மாலன்கோவ் தெரிவித்தது உண்மைதானா?" என்று கேட்டபோது, அட்லியின் காரியதரிசி, "ஆமாம்" எனக் குறிப்பிட்டார்.

வேறு அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி அவர் ஏதும் கூற மறுத்துவிட்டார்.

மக்கள் முன்னேற்றக் கட்சி தலைவர்கள் நாடு கடத்தப்படுவர்!

பிரிட்டிஷ் கயானாவில் கொடுங்கோலாட்சி

ஊருக்கு உபதேசிக்கும் வெள்ளையரின் வெறிச்செயல்

ஜார்ஜ் டவுன், ஆக. 11—

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியில் உள்ள காலனி நாடாக விளங்கும் கயானாவிற்கு விடுதலை பெற்றுத் தர, கயானாவிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியத்தைத் துரத்த, விடுதலைப் போர் நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் முன்னேற்றக் கட்சியின் முக்கியமான தலைவர்களை கயானா நாட்டை விட்டுக் கடத்தி இங்கிலாந்திலே கொண்டுபோய் சிறை வைத்துவிட வெள்ளை ஏகாதிபத்தியம் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தத் தலைவர்கள் எல்லாம் 'கம்யூனிஸ்ட் தொடர்புடையவர்கள்' என்பதே, நாடு கடத்தலுக்காகக் காட்டப்படும் காரணமாம்.

இந்த தலைவர்களில் ஜெட்டி ஜகன், திருமதி ஜனட் ஜகன் உள்ளிட்ட ஆறு பேர்கள் நிச்சயமாக நாடு கடத்தப்படுவார்கள் என நம்பகமாகத் தெரிகிறது.

அவர்களில் ஏற்கெனவே டாக்டர் ஜகனும், ராம்கரன் என்பவரும், கவர்னரின் அடக்குமுறைகளை எதிர்த்தமைக்காக சிறை தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

அவர்களின் தண்டனைக் காலம் முடிவடையும் முன்பே அவர்களை எல்லாம் நாடு கடத்திவிட எண்ணி உள்ளார்களாம்.

மக்கள் முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த அந்த தலைவர்களை குறைந்தது மூன்று வருடத்திற்கு இங்கிலாந்தில் சிறை வைக்க, வெள்ளை ஏகாதிபத்தியம் எண்ணியிருப்பதாகவும் அறியக் கிடக்கிறது.

"நாங்கள் செப்டம்பர் மத்தியில் கயானா நாட்டை விட்டு அகற்றப்படலாம். ஆனால் இந்த நாடு கடத்துதலினால் பிரிட்டனுக்கு என்ன லாபம் கிடைத்துவிடப் போகிறதோ தெரியவில்லை," என்று, கட்சித் தலைவரான பர்ன்ஹாம் குறிப்பிட்டிருக்கிறார்.

சலாசர் சலசலப்பு!

உரிமை உரிமையாகவே இருக்குமாம்!

லண்டன், ஆக. 9—

"இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய பிரதேசங்களின் மீதுள்ள உரிமை எப்பொழுதும் உரிமையாகவே இருக்கும்,"

என்று லிஸ்பன் வானொலியில் பேசிய போர்ச்சுகல் பிரதமர் டாக்டர் சலாசர் கூறினார்.

"விடுதலைப் படையினருக்கு உதவுகிறார்கள்; போர்ச்சுகீசிய இந்திய மக்களின் வாழ்க்கையை நிரந்தரமாகப் பயமுறுத்துகிறார்கள்; சர்வதேச விதிமுறைகளை மீறுகிறார்கள்," என்று, பல குற்றங்களை அவர் இந்தியா மீது சுமத்தினார்.

கமிஷனின் அறிக்கை வரும் வரை நாம் காத்திருக்க வேண்டியதுதான்."



எங்கள் நாடக சுற்றுப் பயணம்

★

வட மதுரை:

14—8—54: 'தவறியவள்?'
15—8—54: 'தாலிக்கயிறு'
16—8—54: 'தவறியவள்?'
17—8—54: 'இரத்தக்கறை'

(பயணம் பட்டியல் அடுத்து அடுத்து வரும்)

வணக்கம்.

கலைத்தூதன் செல்வா, காளையார்கோயில் 2வது தெரு, மதுரை,

கழகக்கூட்டங்கள்

★

சலகண்டபுரம்

திரு வி. க. திடலில்
14—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. தாண்டவன்
பேசுபவர்:
ப. உ. சண்முகம்

★

பின்னாதுறை

பாவோடித் திடலில்
14—8—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
தில்லை-வில்லாளன்
மு. பெ. முத்துக்கருப்பன்

ரூ 500-க்கு மேல் சம்பளம் பெறுபவர்

1952-ம் ஆண்டில் 2,99,552 சர்க்கார் அலுவலர்கள் இருந்தார்கள். இவர்களில், 950 ஆண் அதிகாரிகளும் 15 பெண் அதிகாரிகளும் மாதம் ஒன்றுக்கு ரூ 500க்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்கள்.

1953ல் சர்க்கார் அலுவலர்களின் சம்பளத்திற்காக மொத்தம் சர்க்கார் செலவிட்டதொகையில், இந்த பெரிய அதிகாரிகளின் சம்பளம் 3.5 சதவிகிதமாகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

13—8—54 மாலை 6 மணிக்கு தியாகராயர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் சிவாஜி தலைமையில் நடைபெறும். 'வறுமை' என்னும் பொருள் பற்றி தோழர்கள் இராமதாஸ், செழியன், என். வி. ஜி. அரசராசன், கே. எஸ். அப்துல் ரகீம் ஆகியோர் பேசுவர்.

மாபெரும் கூட்டம்

14—8—54 மாலை 6 மணிக்கு சின்னஓபுளாபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் மாபெருங்கூட்டம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், எம். என். சம்பந்தம் ஆகியோர் பேசுவர். அன்றிரவு பன்னீர் செல்வம் நாடக மன்றத்தாரால் 'நீதியா?' என்னும் நாடகம் நடத்தப்படும்.

'நினைவு நாள்'

14—8—54 இரவு 9½ மணிக்கு மீஞ்சூர் மணி டாக்கீசில் மேலூர் அண்ணா நாடக மன்றத்தாரால் 'நினைவு நாள்' எனும் நாடகம் தோழர்கள் கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராசேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகள்

சென்னையுடன் சேர வேண்டும்

இராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் சென்னை சர்க்கார் சிபாரிசு

சென்னை, ஆக. 11—

"திருவாங்கூர்—கொச்சியில் தமிழகத்துடன் சேர்த்தாற்போல் உள்ள பகுதிகளை சென்னை மாநிலத்தில் சேர்க்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் இராஜ்யப் புனரமைப்பு கமிஷனுக்கு சிபாரிசு செய்திருக்கிறது,"

என்று, சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

செங்கோட்டை, தோவாளை, விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம், கார்குளம், தேவிகுளம், பீர் மேடு ஆகிய தாலூகாக்கள் முழுமையையும், சித்தூர் நெய்யாற்றங்கரையில் தமிழர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளையும் சென்னையுடன் சேர்க்குமாறு வற்புறுத்தப்பட்டிருக்கிறது;

மலபார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சென்னை சர்க்கார் நடுநிலைமை வகிக்கிறது.

மேலும் உப கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் அவர் கூறியதாவது:—

"இது வெறும் சிபாரிசு தான்; கமிஷன் கடைசியாக என்ன முடிவு செய்யுமென்பது எனக்குத் தெரியாது

'மர்ம' நோய்!

அநேக குழந்தைகள் பலி

'மர்மமான' நோய் ஒன்றினால் கடந்த சில நாட்களில் லக்னோவில் ஏராளமான குழந்தைகள் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டனவாம். இந்த வியாதி பிடித்தவர்களுக்கு சிகிச்சை செய்ய இரண்டு மருத்துவர்களும், ஒரு தனி 'ஆம்புலன்ஸ்' வண்டியும் உ. பி. சர்க்காரால் தரப்பட்டுள்ளதாம்.

இந்த நோய்க்குக் காரணம் என்ன? இந்த நோயின் பெயரென்ன என்பதே இன்னமும் பெரிய டாக்டர்களுக்கும் புரியாத புதிராயிருக்கிறதென்று சர்க்கார் அறிவிப்பு கூறுகிறது.

திரு—கொ. விடுதலை தினம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்தனர். இதன் காரணமாக மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்று சர்க்கார் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாண்டவர்கள் தொகை ஏழு பேர் இருக்குமென்று தமிழ்நா காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குழித்துறைக்கு 4 மைல் தூரத்தில் உள்ள புதுக்கடையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் போலீசார் நுழைந்து மூன்று தலைவர்களைக் கைது செய்தபோது மக்கள் கிளர்ச்சி செய்தனர் என்றும், இதனைச் சமாளிக்க போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் மாண்டார் என்றும், மற்றொருவர் படுகாயமுற்றார் என்றும் தெரிகிறது.

'விடுதலை தினம்' திரு—தமிழர் பகுதிகள் அனைத்திலும் வெற்றிகரமாக நடைபெற்றது,

தேவிகுளத்தில் மட்டும் 90,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனராம்!

நாகர்கோவில், மற்றும் இதர இடங்கள் அனைத்திலுமாக மொத்தம் 200 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

குழித்துறை, புதுக்கடை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் 4 பேர் மாண்டதாக திரு—கொச்சி சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது.

தமிழர் அறப்போர் சர்வாதிகாரி குஞ்சன் நாடார் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குழித்துறையில் 7 பேரும், புதுக்கடையில் 4 பேரும் மாண்டதாக அறிவித்துள்ளார்.

குழித்துறையில் கம்யூனிஸ்டு தோழர்கள் கிளர்ச்சி செய்த இடங்களில் நிலைமை மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்ததாம். டெலிபோன், தந்திக் கம்பங்கள் அறுக்கப்பட்டதால் திருவனந்தபுரத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாம்! ஆர்ப்பாட்டம் செய்தோர் பஸ்களை தடுத்து நிறுத்தியதாகவும், கற்கள் வீசப்பட்டதாகவும் தெரிகிறது.

குழித்துறையில் உள்ள நிலைமை பற்றி பலவிதமான செய்திகள் வெளியாகி உள்ளன. தக்க போக்குவரத்து வசதிகள் இல்லாததால் எதுவும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

'விடுதலை தினம்' நடைபெற்ற பல இடங்களில் மக்கள், சர்க்கார் பஸ்களைத் கொளுத்தியதாகவும், சாலைகளில் மரத்தை வெட்டிச் சாய்த்து போலீசார் வர இயலாதபடி தடுத்ததாகவும் கூறப்படுகிறது.

நாகர்கோவிலில், தோழர்கள் நேசமணி எம். பி, நூர்முகம்மது, குஞ்சன் நாடார், ராமசாமி பிள்ளை) ஆகியோர் தலைமையில் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு நகரின் வீதி வழியே வலம் வந்தது.

இன்னுமொரு ஊர்வலம் தோழர் ஜீவானந்தம், எம். எல். ஏ. தலைமையில் கம்யூனிஸ்டு தொண்டர்களுடன் வந்து முதல் ஊர்வலத்தில் கலந்து கொண்டது. அப்போது ஊர்வலம் மிகப் பெரியதாக வளர்ந்து அறப்போர் களம் நோக்கிச் சென்றது.

புதுவை கவர்னர் புறப்பாடு!

பாரிஸ் பயணம் இறுதியானதா?

புதுச்சேரி, ஆக. 11—

பிரெஞ்சிந்திய கவர்னர் எம். மேனார்டு சென்னை வழியாக பாரிசுக்குப் பயணமாகிறார் என்று தெரிகிறது. பாரிசிலிருந்து தனக்கு வந்துள்ள தாக்கீதிற் கிணங்கவே அவர் பாரிஸ் செல்வதாகவும், அவர் அங்கேயே தங்கிவிடுவாரா அல்லது சில நாளில் மீண்டும் திரும்புவாரா என்பது அவருக்கே இன்னமும் தெரியவில்லையென்றும் கூறப்படுகிறது.

மேனார்டு, தனது தட்டு முட்டுச் சாமான்களையும், குழந்தை குட்டிகளையும் ஏற்கனவே பாரிசுக்கு அனுப்பி விட்டது நினைவிருக்கலாம்.

இன்றுள்ள நிலைகளில் இம்மேயோ, மறுமாதமோ, பாரிசிலிருந்து பிரெஞ்சிந்தியாவை விட்டு, பிரான்ஸ் விலகுகிறது என்ற செய்தி வெளிவரலாம் என்பதை புதுவை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

இன்னும், மேனார்டின் பயணம் 'இறுதி'யானதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆந்திர பிரிவினையால்...

சென்னையில் 1,000 பேர் வேலை இழந்தனர்

ஆந்திர மாநிலம் சென்னையிலிருந்து கடந்த அக்டோபரில் பிரிந்ததின் காரணமாக 982, பதிவு செய்யப்படாத சர்க்கார் உத்தியோகஸ்தர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும், 95 பதிவு செய்யப்பட்ட அதிகாரிகள் புதிதாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் சென்னை நிதி மந்திரி சட்டசபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

சர்க்கார் அலுவலர்களின் சம்பளம்

1952—53-ம் ஆண்டில், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அரசாங்கம் சம்பளமாக 2571.15 லட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாக சென்னை நிதி மந்திரி அறிவித்தார்.

இராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (18, குறுக்கு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.